இலங்கை திறந்த பல்கலைக்கழகம்

மானுடவியல் மற்றும் சமூக விஞ்ஞானங்கள் பீடம்

சட்டக் கற்கைகள் திணைக்களம்

சட்டமாணி பட்டப்படிப்புத்திட்டம் - மட்டம் 6

இறுதிப் பரீட்சை -2017/2018

**LWU 4323/LLU6715 – தொழிற் சட்டம்**

காலம் : மூன்று (03) மணித்தியாலங்கள்

திகதி : 26-02-2020 நேரம் : பி.ப 01.30 - பி.ப 4.30

தெளிவற்ற கையெழுத்துக்கு புள்ளிகள் குறைக்கப்படும்.

ஐந்து (05) வினாக்களுக்கு விடை தருக.

1. ஒரு காலத்தில் பொதுச் சட்டமானது தொழில் தருனருக்கு தன்னுடைய வேலையாள் மீது தனியுரிம உரிமைகளை வழுங்கியதோடு தொழிலாளிகள் ஒப்பந்தங்களை மீறுகின்ற போது அவர்கள் மீது குற்றவியல் உறுத்தங்களை விதிக்கக் கூடியதாக இருந்தது. அந்தக் கால கட்டத்தில் இருந்து பொதுச் சட்டம் நீண்ட காலம் ஒன்றை கடந்து வந்த போதிலும், தொழில் ஒப்பந்தம் சம்பந்தமான நவீன பொதுச் சட்டம் திறத்தவர்களுடைய உரிமைகளை தீர்மானிக்கின்ற போது ஓரளவு கரிசனை வழங்குகிறது…"

   *SRDE.Silva , The Contract of Employment, The Employer Federation of Ceylon, 2008 p 21*

   மேற்போந்த கூற்றுடன் நீர் உடன்படுகிறீரா?

   இலங்கையில் தொழிற் சட்ட பரப்பில் ஏற்பட்ட அபிவிருத்திகளுடன் தொடர்புறுத்தி உமது விடைக்குரிய காரணங்களைத் தருக?

   (20 புள்ளிகள்)

2.(அ) தனியார் துறை தகுதிகாண் தொழிலாளர்களுடைய தொழிற்பாதுகாப்பு தொடர்பான சட்ட அணுகுமுறைகளை விளக்குக. உமது விடையைப் பொருத்தமான தீர்ப்புச் சட்டத்துடன் ஆதாரப்படுத்த வேண்டும்.

   (10 புள்ளிகள்)

(ஆ) 'AMC பில்டர்ஸ்' என்பது நன்கு அறியப்பட்ட ஒரு கட்டுமான கம்பனியாகும். இதனுடைய பல திட்டங்கள் நாட்டின் பல்வேறுபட்ட பிரதேசங்களில் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன. 2015 ஜனவரியில் AMC பில்டர்ஸ் கம்பனி வெள்ளவத்தையில் உள்ள வதிவிட கட்டுமான திட்டங்களில் வேலை செய்ய சானக்கவை பணிக்கு அமர்த்தியது. எவ்வாறாயினும் குறிப்பிட்ட பணித்தளத்தில் இருந்து இன்னுமொரு தளத்திற்கு சானக்கவை இடமாற்றம் செய்யப்பட்டதுடன் அவனுடைய கொடுப்பனவு வாரஅடிப்படையில் செலுத்தப்பட்டது.

கம்பனி அவனுக்கு “சமயா சமய ஊழியர்” என்ற தொழில் அந்தஸ்தை வழங்கியது. AMC பில்டஸின் ஏனைய ஊழியர்களுக்கு வழங்கப்பட்ட தொழிற் கொடுப்பனவுகள் அவனுக்கு வழங்கப்படவில்லை.

2019 டிசம்பர் மாதம் அவனுடைய சேவைகள் தொடர்ந்து கம்பனிக்கு தேவைப்படாது என்ற அடிப்படையில் சானக்கவின் சேவைகள் முடிவுறுத்தப்பட்டன.

ஜனக என்பவன் இரண்டு வருட கால ஒப்பந்த அடிப்படையில் உதவிப் பொறியியலாளராக கம்பனியில் வேலைக்கு அமர்த்தப்பட்டான். அவனுடைய ஒப்பந்தம் 2020 பெப்ரவரி 1 ம் திகதி முடிவடைய இருக்கிறது.

AMC பில்டர்ஸ் ஜனகவினுடைய ஒப்பந்தத்தை மீள்புதுப்பிக்கவில்லை என்ற முடிவை எடுத்தது. ஜனக மற்றும் சானக்க ஆகியோர் அவர்களுடைய சேவைகள் முடிவுறுத்தப்பட்டமைக்கு எதிராக ஏதேனும் நிவாரணம் பெற உரித்துடையவர்களா என அறிய விரும்புகின்றனர். அவர்களுக்கு அறிவுறுத்துக. உமது விடையினை உரிய ஆதாரங்களுடன் ஆதாரப்படுத்த வேண்டும்.

(10 புள்ளிகள்)

03. “தொழில் நியாய சபையினுடைய ஒப்புரவு இயல்பைக் கொண்ட நியாயாதிக்கம் எமது நீதிமன்ற திர்ப்புக்களின் மூலம் ஒரு சீராக அங்கீகரிக்கப்பட்டுள்ளது, எவ்வாறாயினும் நியாயமான மற்றும் ஒப்பரவு அடிப்படையில் தொழிலாளர்களுடைய குறைகளை நிவர்த்தி செய்யும் செயன்முறையில் ஒருவர் நடபடி ரீதியான தகைமை மற்றும் சான்றுரீதியான நெறிமுறை ஆகிய நோக்கை இழக்க முடியாது”

Saleem Marsoof, J. in Indrajith Rodrigo v Central Engineering Consultancy Bureau, (2009) I Sri LR 248 at p.260.

கைத்தொழில் பிணக்குகள் சட்டத்தின் ஏற்பாடுகள் மற்றும் தீர்ப்புச் சட்டங்களின் உதவியுடன் மேலே தரப்பட்ட கூற்றை நுணித்தாராய்க

(20 புள்ளிகள்)

04. நாமல், சூர்யா அன்ட் சன்ஸ் லிமிடட்டின் ஊழியர் ஒருவராவான். நிதிப்பிரச்சினை காரணமாக சூர்யா அன்ட் சன்ஸ் லிமிடட் அவர்களுடைய இரண்டு கைத்தொழில்களை ஒன்றிணைக்க தீர்மானித்தனர். மிகை ஊழியர்கள் காரணமாக நாமல் உட்பட ஏறக்குறைய இருபது ஊழியர்களுடைய வேலை முடிவுறுத்தப்பட்டது. நாமலும் ஏனைய ஊழியர்களும் பல வருடங்களாக இந்த கம்பனியில் கடமையாற்றினர். கம்பனியினுடைய நிர்வாகம் நாமலுக்கு சம்மதத்தையோ அல்லது தொழில் ஆணையாளருடைய அங்கீகாரத்தையோ பெறவில்லை

நாமல் தன்னுடைய வேலை முடிவுறுத்தப்பட்டமைக்காக எந்த வித நட்டஈட்டையும் பெறவில்லை.

பின்வரும் விடயங்கள் தொடர்பில் நாமல் உமது ஆலோசனையை நாடுகின்றான்.

(அ) தொழிலாளரினுடைய தொழில் முடிவுறுத்தல் ( விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் அவனுடைய தொழில் முடிவுறுத்துகை சட்ட ரீதியாக வலிதுடையதா?

(10 புள்ளிகள்)

(ஆ) தொழில் ஆணையாளரால் நாமலை மீண்டும் வேலையில் அமர்த்தும்படியோ அல்லது வேறு ஏதேனும் ஏனைய நிவாரணம் ஒன்றை நாமலுக்கு வழங்குமாறோ சூர்யா அன்ட் சன்ஸ் லிமிடட் சனிஸற்கு கட்டளையிட முடியுமா?

(10 புள்ளிகள்)

தொழிலாளரினுடைய தொழில் முடிவுறுத்தல் ( விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் இயைபான ஏற்பாடுகளுடன் விசேடமாக தொடர்புறுத்தியும் தீர்ப்புச் சட்டங்களின் உதவியுடனும் நாமலுக்கு ஆலோசனை வழங்குக.

05. தனியார் துறை ஊழியர்களுக்கு சமூக பாதுகாப்பை மேம்படுத்துவது தொடர்பில் பணிக்கொடை கொடுப்பனவு சட்டத்தினுடைய விளைதிறன்களை விமர்சித்து மதிப்பிடுக.

(20 புள்ளிகள்)

06. D.J லெதர் பிலைவேட் லிமிடட் இலங்கையில் சப்பாத்து உற்பத்தியில் முதலிடம் வகிக்கும் கம்பனிகளில் ஒன்றாகும். இந்த கம்கனி 800 வேலையாட்களைக் கொண்டுள்ளது. கம்பனியுடைய தொழிற் சங்கம் ஒன்றான DJ சேவக சமித்தியில் 650 இற்கு மேற்பட்ட ஊழியர்கள் அங்கத்தவம் வகிக்கின்றனர், கடந்த வருடம் ஏனைய ஊழியர்கள் நிதகஸ் DJ சேவக சமித்தி என அழைக்கப்படும் இன்னுமொரு தொழிற்சங்கம் ஒன்றை உருவாக்கினர். தற்போது இப்புதிய சங்கத்தில் 80 ஊழியர்கள் அங்கத்துவம் பெற்றுள்ளனர்.

சுரத் என்பவர் 2020 ஜனவரியில் DJ லெதர் கம்பனியில் தகுதிகாண் தொழிலாளியாக பணிக்கமர்த்தப்பட்டான். அவன் பணிகளை ஏற்கும் போது முகாமைத்துவம், சரத் தொழிற் சங்கம் ஒன்றில் இணைய விரும்பினால் நிதகஸ் DJ சேவக சமித்தியவில் இணைய வேண்டும் என அறிவித்தது. மேலும் DJ சேவக சமித்தியவில் அவன் இணைந்து கொண்டால் அவனுடைய வேலை நிரந்தரமாக்குதல் பாதிப்படையும் எனவும் அறிவிக்கப்பட்டான்.

DJ சேவக சமித்தியினுடைய அங்கத்தவர்கள் புதிய ஊழியர்கள் தமது தொழிற் சங்கத்தில் இணைவதை முகாமைத்துவம் தடுக்கின்றமையை முன்னிட்டு அவர்களுடைய முரண்பாட்டை தெரியப்படுத்தவதற்காக ஆர்ப்பாட்டம் ஒன்றை ஏற்பாடு செய்தனர். இவ் விடயங்கள் தொடர்பாக DJ சேவக சமித்தியுடன் எந்தவித பேச்சுவார்த்தைகளையும் மேற்கொள்ள முகாமைத்துவம் மறுத்தது. ஆர்ப்பாட்டம் நடைபெற்ற சில நாட்களின் பின்பு கம்பனி DJ சேவக சமித்தியுடைய சில உத்தியோக பூர்வ ஆட்கள் உள்ளிட்ட அதனுடைய 10 ஊழியர்களுடைய தொழிலை முடிவுறுத்தியது. இத்தகைய பணி நீக்கம் தொழிற்சங்க உறுப்பினர்களை பழிவாங்கும் செயற்பாடு என சங்கம் குற்றம் சாட்டியது. முகாமைத்தவத்தினுடைய ஏதேச்சிகரமான தீர்மானங்களுக்கு எதிராக DJ சேவக சமித்தி வேலை நிறுத்தம் ஒன்றை ஆரம்பித்தது.

வேலை நிறுத்த காலத்தின் போது DJ சேவக சமித்தியவுடைய அனைத்து அங்கத்தவர்களும் வேலைக்கு சமுகமளித்தனர். அவர்களுடைய சம்பளத்திற்கு மேலதிகமாக ஒரு விசேட கொடுப்பனவும் வழங்கப்பட்டது. வேலை நிறுத்தம் காரணமாக, கம்பனி சில வெளிநாட்டு கட்டளைகளை பூர்த்திசெய்ய தவறியதுடன் அது பாரியளவு நிதி நட்டத்தினையும் கம்பனிக்கு ஏற்படுத்தியது. தற்போது வேலை நிறுத்தத்தில் ஈடுவட்டவருக்கு எதிராக கம்பனி சட்ட நடவடிக்கை எடுக்க விரும்புகிறது.

மேலே குறிப்பிட்ட சூழ்நிலையில் தலையிட்டுள்ள சட்ட பிரச்சினைகளை இனங்கண்டு, தொடர்புடைய திறத்தவர்களுக்கு சட்ட அதிகாரங்களின் உதவியுடன் அறிவுரை வழங்குக.

(20 புள்ளிகள்)

07. (அ) இலங்கையின் தனியார் துறை பெண் ஊழியர்கள் தொடர்பான பணி நேரம், இரவுவேலை, மகப் பேற்று நன்மைகள், வேலை சூழ்நிலைகள் தொடர்பான நியதிச்சட்ட ஏற்பாடுகளை நுணித்தாராய்க?

(12 புள்ளிகள்)

(ஆ) இலங்கையின் தனியார் துறை பெண் ஊழியர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் மற்றும் சவால்களை போதுமானளவு நிவர்த்திசெய்ய தற்போது இருக்கின்ற சட்டக் கட்டமைப்பு போதுமானது என நீர் கருதுகிறீரா? உமது விடைக்குரிய காரணங்களைத் தருக?

(08 புள்ளிகள்)

08 கீழே தரப்பட்டள்ளவற்றில் ஏதேனும் இரண்டினை (02) விளக்குக.

(அ) கூட்டு பேரம் பேசுதல் மற்றும் கூட்டு உடன்படிக்கை

(ஆ) சிறுவர் தொழில்

(இ) கைத்தொழில் நடுத் தீர்ப்பு

(10x2=20 புள்ளிகள்)

பதிப்புரிமை பெற்றது